S.T.C .NO.1679/2024 Date:28.10.2025

Page No.

பு.சா.1. ராஜேந்திரன், த/பெ.சின்னப்பையன், வயது.45

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:–**

09.05.2024 அன்று நான் புகார் அளித்த புகாருக்குப் பின் எங்களுக்குள் பணப்பரிவர்த்தனை நடைபெற்றதா என்றால் ரூ.2,00,000/– ஐ எதிரி எனக்கு கொடுத்தார், எதிரி எனக்கு எத்தனை காசோலைகள் வழங்கியுள்ளார் என்றால் 4 காசோலை வழங்கினார் அதில் 2 ஐ திரும்பப்பெற்றுக்கொண்டார். எதிரி வழங்கிய புரோநோட்டில் வட்டி சதவீதம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 12 % என்று உள்ளது, அதில் வருடத்திற்கு என்று குறிப்பிடுவதற்கு பதிலாக மாதத்ததிற்கு என்று குறிப்பிடப்பட்டிருந்ததது. எதிரி எனக்கு வட்டியாக எவ்வளவு பணம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தர வேண்டியதில் ரூ.2,00,000/– கொடுத்தார். வட்டி கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் முதலில் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தாத போது நான் இரண்டாவதாக கடன் கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. புரோநோட்டை யார் எழுதியது என்றால் எதிரியே எழுதினார், அதில் சாட்சியாக எதிரியின் மனைவி S.விஜயகீதா மற்றும் எங்களுடன் பணிபுரியும் R.தருமராஜன் சாட்சியாக இருந்தனர். என்னுடைய வங்கிக்கணக்கிலிருந்து எதிரியின் அண்ணன் மாரிமுத்துவின் வங்கிக்கணக்கிற்கு 27.04.2023 முதல் 22.06.2023 வரை 4 பணப்பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான், **அந்த பரிவர்த்தனை Statement எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 27.04.2023 அன்று ரூ.5,00,000/–ம், 02.05.2023 அன்று ரூ.1,00,000/–ம் என்று புரோநோட்டிற்காக வழங்கப்பட்ட பணம். 07.03.2023 அன்று ரூ.4,00,000/–ம் 09.03.2023 அன்று ரூ.1,80,000/–ம் 23.03.2023 அன்று ரூ.23,000/–ம் எதிரியின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பினேன். மேற்கூறிய பணப்பரிவர்த்தனை எ.சா.ஆ.1–ல் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டை (2 எண்ணிக்கைகைகள்) மற்றும் அறிவிப்பிலுள்ள உள்ள முகவரி என்னுடையதுதான். **எதிரியின் அண்ணன் மாரிமுத்து புகார்தாரருக்கும் அவருடைய மனைவிக்கும் அனுப்பிய அறிவிப்பு மற்றும் 2–அஞ்சல் ஒப்புகை அட்டைகள் முறையே எ.சா.ஆ.2 முதல் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி **20.08.2024** தேதியிட்ட அறிவிப்பு இந்த வழக்கின் காசோலையை வங்கியில் வசூலுக்கு செலுத்துவதற்கு முன்பாக

அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்க நான் பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் அப்போது பெங்களூருவில் பணியிலிருந்தேன். எதிரி என்மீதும், நான் அவர்மீதும் எங்களுடைய உயரதிகாரியிடம் இதுகுறித்து புகார் அளித்து எங்களை விசாரித்தனர் என்றால் சரிதான். முதலில் நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் **எதிரி என் மீது அளித்த புகார் எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியின் அண்ணன் மாரிமுத்து எனக்கு 07.07.2023 Phonepe மூலமாக இரண்டு முறை ரூ.12,000/- அனுப்பியுள்ளார் என்றால் சரிதான், எதிரி அறிவுருத்தலின் படி அவருடைய மனைவி கூறியதாக அவருடைய அண்ணன் அனுப்பினார். எதிரி மீது புரோநோட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இன்னும் செய்யவில்லை ஆனால் செய்வேன். 04.03.2023 முதல் 12.11.2023 வரையில் எதிரியின் அண்ணனுக்கு நான் Whatsapp மூலமாக மெசேஜ் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். **(மேற்குறிப்பிட்ட கேள்வி புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டது)** எதிரி விருப்பத்தினால் தான் அவ்வாறு செய்தேன். எதிரியின் அண்ணன் மாரிமுத்து எனக்கு என்னிடம் காட்டப்படும் Application Form-ஐ Whatsapp மூலமாக அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி விஜயகீதா, எதிரியின் அண்ணன் மாரிமுத்துவின் மூலமாக Neo Max என்ற நிறுவனத்தில் பணம் செலுத்தி அதன் மூலம் பயனடைந்து வந்ததால் அதைப்பாரத்து நானும் மேற்படி Neo Max நிறுவனத்தின் துணை நிறுவனத்தில் பணம் செலுத்த ஆசைப்பட்டு எதிரியின் மூலம் பழக்கமான அவரது அண்ணன் மாரிமுத்துவின் வங்கிக்கணக்கிற்கு பணம் அனுப்பி என் மனைவியின் பெயரிலும் என்னுடைய நண்பர் ரவிக்குமார் பெயரிலும் முதலீடு செய்தேன் என்றால் தவறு, நான் எதிரிக்கு தான் பணம் கொடுத்தேன். மேற்படி நிறுவனத்தில் முதலீடு செய்வதற்காக எதிரிக்கு நான் பணம் அனுப்பிய மறுநாள் அவர் அவரது அண்ணனுக்கு அனுப்பினார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது நான் எதிரிக்கு தான் பணம் கொடுத்தேன். 20.06.2023 அன்று மதுரை பொருளாதார குற்றப்பிரிவினர் மேற்படி Neo Max நிறுவனம் மற்றும் துணை நிறுவனத்தை வழக்கு பதிவு செய்து முடக்கியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரி மூலமாக எதிரியின் அண்ணன் பழக்கமானதால் எதிரியிடம் பிரச்சனை செய்து மேற்படி நிறுவனம் பணம் தரும்வரை செக்யூரிட்டிக்காக எதிரியிடம வாங்கிய காசோலை மற்றும் கடனுறுதிப்பத்திரத்தை வைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இது முற்றிலும் தவறு, எதிரி என்னிடம் வாங்கிய கடனுக்காகக தான் காசோலை மற்றும்

புரோநோட்டை எதிரியே எழுதிக்கொடுத்தார். 20.01.2023, 15.02.2023, ஜூன் 2023 ஆகிய தேதிகளில் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் அதற்காக காசோலைகள் வழங்கவில்லை என்றால் சரியல்ல, இது முற்றிலும் தவறு.

**<u>மறுவிசாரணை:-</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,

Tirupathur.